மதுரை வேளாண் வனவியல் ஆராய்ச்சிக் கோட்டஉதவி வனப்பாதுகாவலர் அவர்களின்
செயல்முறை ஆணைகள்
முன்னிலை:- திருM.இளங்கோ,B.Com.,,
உதவி வனப்பாதுகாவலர்

செ.மு.ஆ.எண்:199/2021/ப, நாள்: 02.03.2021

பொருள்: பணி வரன்முறை - தட்டச்சர்களுக்கான குரூப் IV தேர்வுகள் 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி - தட்டச்சர் பணிக்கான தேர்வுப் பட்டியலில் செல்வி.N.வனிதா, தட்டச்சர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு ஆராய்ச்சி மண்டலம், உதவி வனப்பாதுகாவலர் அலுவலகம், வேளாண் வனவியல் ஆராய்ச்சிக் கோட்டம், மதுரைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணி நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்தது - பணி வரன்முறைப்படுத்தி தகுதிகாண் பருவத்தில் வைத்திருப்பது - ஆணை வழங்குவது - குறித்து

பார்வை:
1) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்), சென்னை ந.க.எண்.W1/42034/2020, நாள்: 03.02.2021
2) தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி), சென்னை ந.க.எண்.320/2021/ப1, (ப.ஆ.எண்.11/2021/ப1), நாள்: 08.02.2021
3) உதவி வனப்பாதுகாவலர், வேளாண் வனவியல் ஆராய்ச்சிக் கோட்டம், மதுரை ந.க.எண்.199/2021/ப, நாள்: 16.02.2021

*****

பார்வை 1 மற்றும் 2ல் கண்ட உத்தரவுகளின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் தட்டச்சர்களுக்கான குரூப் IV தேர்வுகள் மூலம் 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான தட்டச்சர் பணிக்கு செல்வி.N.வனிதா, தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து பார்வை 3ல் கண்ட இவ்வலுவலக உத்தரவின்படி மதுரை வேளாண் வனவியல் ஆராய்ச்சிக் கோட்டம், உதவி வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் காலியாக உள்ள தட்டச்சர் பணியிடத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு கடந்த 16.02.2021 மு.ப முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை எண்.32 சுற்றுச்சூழல் மற்றும் வனம் (வனம்-2)துறை , நாள்: 08.03.2019 வழிகாட்டுதலின்படி தட்டச்சர்களுக்கு மாவட்ட வன அலுவலர் / உதவி வனப்பாதுகாவலர் நிலையிலேயே நியமனம் ஆணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே செல்வி.N.வனிதா, தற்காலிக பணி தமிழ்நாடு மாநில சார்நிலைப் பணி பொது விதி 23(a)d ன்படி வரன்முறைப்படுத்தியும் மூன்றாண்டுகளில் இரண்டாண்டு காலம் பணிக்காலத்தில் கீழ்க்கண்ட நிபந்தனையுடன் தகுதிகாண் பருவத்தில் வைக்கவும் ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். | TNPSC எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறைப்படுத்தப்பட்ட நாள் | தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2403011294 | N.வனிதா | 16.02.2021 | 16.02.2021 மு.ப | 16.02.2021 மு.ப |

மேலும் மேற்கண்ட தட்டச்சரின் பணியினை வரன்முறை செய்து வழங்கப்படும் ஆணையானது 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுக்கான தொகுதி IV தேர்வு குறித்து சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவை உள்ள வழக்குகள் மீது வழங்கப்படும் ஆணைகளுக்குட்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி வனப்பாதுகாவலர்,
வேளாண் வனவியல் ஆராய்ச்சிக் கோட்டம்,
மதுரை

02/03/21

2-3-21

பெறுநர்:

செல்வி.N.வனிதா,
தட்டச்சர்,
உதவி வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வேளாண் வனவியல் ஆராய்ச்சிக் கோட்டம்,
மதுரை
**நகல்:** பணிப்பதிவேடு
**நகல்:** ”ப” இருக்கைக்கு